# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.12/2025

## அ.சா.10 (LW 15 )

| பெயர் | திரு. தீத்தான் | தொழில் | |
|---|---|---|---|
| த/ பெயர் | குருநாதன் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 30.06.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2,3,5,10 எதிரிகள் ஆஜர். 4,6,7,8,9 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் இடையோட்டையில் குடியிருந்து வருகிறேன். டைல்ஸ் ஒட்டும் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இதற்கு முன்பு 2023 வருடத்திற்கு முன்பு வரை புதுப்பட்டியில் குடியிருந்தேன். வழக்கில் இறந்த ராசு எங்கள் தூரத்து உறவு முறை ஆவார். கடந்த 2 வருடம் முன்பு மதியம் எங்களது ஊர் குளத்துக்கரையில் நான் இருந்த போது போலிசார் வந்து கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

2023ம் வருடம் நான் புதுப்பட்டியில் குடியிருந்தேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் ராசு அவருக்கு சொந்தமான வீடு விற்பது சம்மந்தமாக எங்கள் உள்ளூரை சேர்ந்த சண்முகவேல், ஸ்ரீரங்கள் மற்றும் பில்லமநாயக்கன்பட்டியை சேர்ந்த ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, ஆகியோரிடம் சொல்லி ராசு வீடு விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீடு விற்ற வகையில் புரோக்கர் கமிசனாக ரூ.50,000/–த்தை ராசுவிடம் சண்முகவேல், ஸ்ரீரங்கன் வாங்கி கொண்டார்கள் என்றால் தெரியாது. அதன் பின்பு கமிசன் வாங்கிய சமயத்தில் ரெங்கமூர்தி வெளியூர் சென்றிருந்தார் என்றாலும் பின்பு அவர் ஊருக்கு வந்த பின்பு வழக்கில் இறந்து போன ராசுவிடம் நானும் வீட்டை விற்றுக் கொடுத்தேன் என்றும் அதனால் தனக்கும் கமிசன்

வேண்டும் என கேட்டதாகவும், அதற்கு ராசு தான் வேலைக்கு எதுவும் செல்லாததால் ராசு தான் வேலைக்கு எதுவும் செல்லாததால் தன்னிடம் பணம் இல்லை என சொன்னதாகவும், அதற்கு ரெங்க மூர்த்தி தான் தற்போது வீடு கட்டிக் கொண்டிருப்பதாகவும், அதற்கு செங்கலாவது இறக்கி விடு என சொன்னதாகவும் அதற்கு ராசு தன்னிடம் பணம் இல்லை என தோரணையாக பேசிய விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. கடந்த 07.08.2023 அன்று காலை 08.00 மணிக்கு ராசுவும் நானும் அவரது வீட்டிற்கு முன்பு நின்றிருந்தோம் என்றால் இல்லை. அவ்வாறு நாங்கள் நின்றிருக்கும் போது ரெங்கமூர்த்தி ராசுவிடம் வந்து சண்டை போட்டதை நானும் ராசுவின் மனைவியும் அதை விலக்கி விட்டோம் என்றால் இல்லை. அப்போது ரெங்கமூர்த்தி ராசுவை நீ தர வேண்டிய பணத்தை தராமல் ஏமாற்றி விட்டாய், என்றும் உன்னை உயிரோடு விடமாட்டேன் என மிரட்டி சென்றார் என்றால் தெரியாது. அதன்பின்பு அதே தேதியில் காலை 11.00 மணிக்கு எங்கள் ஊர் புதுப்பட்டி கைலாயி கோவில் அருகே நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த அந்தோணி செல்வகுமாரும் நின்று கொண்டிருந்தோம் என்றாலும், அப்போது எனக்கு தெரிந்த சண்முகவேல், ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, இரஞ்சித்குமார், பூபதிராஜா, திவாகர், வினோத்குமார், சக்திவேல், கணேஷ்குமார், கார்த்தி, விக்னேஷ், பிரபு ஆகியோர்கள் என் பக்கத்தில் கூட்டமாக இருந்தார்கள் என்றால் தெரியாது. அப்போது நான் நின்று கொண்டிருக்கும் போது என் காதுபட சண்முகவேல் , ரெங்கமூர்த்தி, கணேஷ்குமார், விக்னேஷ் ஆகியோர் அங்கிருந்த மற்றவர்களிடமும் ராசுவை நம்மள யார் என்று தெரியாமல் நம்மிடம் மோதுகிறான் என்றும், நமக்கு தரவேண்டிய பணத்தை கேட்டால் உன்னால் முடிந்ததை பார் என சொல்கிறான் என்றும், இதனால் மற்றவர்களுக்கும் நம்மள கண்டால் பயம் இல்லாமல் போய்விட்டது, இதனால் ராசுவிடம் எந்த பேச்சும் கிடையாது என்றும், வீச்சுத்தான் என்று சொன்ன போது அங்கிருந்த மற்றவர்கள் ராசு ரொம்ப ஓவராத்தான் போறான், அவன நம்ம தட்டுனாத்தான் ஊருக்குள் நம்மீது பயம் இருக்கும் என சொன்னார்கள் என்றால் தெரியாது. அதன்பின்பு கடந்த 07.08.2023 அன்று மதியம் 02.45 மணிக்கு நான் புதுப்பட்டி காளியம்மன் கோவில் பின்புறம் உள்ள காட்டுப்பகுதியில் நின்றிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது எனக்கு தெரிந்த மேற்கு ராமநாதபுரத்தை சேர்ந்த சக்திவேல் என்பவர் TN 57-BT- 5052 என்ற மோட்டார் சைக்கிளையும், புதுப்பட்டியை சேர்ந்த பிரபு , திவாகர் , வினோத்குமார் ஆகிய மூவரையும் அழைத்துக் கொண்டும் அதனை தொடர்ந்து மருதாணி குளத்தை சேர்ந்த கார்த்திக் என்பவர் TN -64 M-2736 என்ற இருசக்கர வாகனத்தில் ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, ரஞ்சித் குமார், பூபதிராஜா ஆகிய மூவரையும் அழைத்துக் கொண்டு நான் நின்றிருந்த காட்டுப்பகுதிக்கு போனார்கள் என்றால் நான் பார்க்கவில்லை, ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, ரஞ்சித் குமார், பூபதிராஜா ஆகிய மூவரும் நீளமான கத்தி ஒன்றை வைத்திருந்ததாகவும், பிரபு, திவாகர், வினோத்குமார் ஆகிய மூவரும் சிறிய

கத்தி வைத்திருந்ததாகவும், சக்திவேலும், கார்த்திக்கும் அவர்கள் வந்த வண்டியை மறைவான இடத்தில் நிறுத்தி வைத்ததை நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. அதன்பின்பு 03-00 மணி போல நான் அந்த தெரு பக்கம் போன போது அலறல் சத்தம் கேட்டது என்றால் சரியல்ல. நான் போய் அந்த தெருவில் பார்க்கும் போது ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, ரஞ்சித் குமார், பூபதிராஜா ஆகிய மூவரும் இரத்தம் பட்ட கத்திகளுடனும் ரெங்கமூர்த்தி, ரஞ்சித்குமார், பூபதிராஜா ஆகிய மூவரும் , கார்த்தி தயாராக வைத்திருந்த கார்த்தி ஸ்டார்ட் பண்ணி நின்று கொண்டிருந்த TN -64 M-2736 என்ற இருசக்கர வாகனத்தில் சக்திவேல் ஸ்டார்ட் பண்ணி நின்று கொண்டிருந்த TN 57-BT- 5052 என்ற மோட்டார் சைக்கிளில் பிரபு, திவாகர், வினோத்குமார் தப்பித்து சென்றார்கள் என்றால் தெரியாது. ராசுவை வீடு புகுந்து வெட்டிக் கொலை செய்து ராசுவின் தலையில் பலத்த இரத்த காயங்களுடன் இறந்து கிடந்ததை நான் பார்த்தேன் என்றும், சண்முகவேல், ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, இரஞ்சித்குமார், பூபதிராஜா, திவாகர், வினோத்குமார், சக்திவேல், கணேஷ்குமார், கார்த்தி, விக்னேஷ், பிரபு ஆகியோர்கள் என் முன்பு சதித்திட்டம் தீட்டி கொலை செய்தார்கள் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எனக்கு தெரிந்த காரணங்களுக்காக உண்மையை மறைத்து எதிரிகள் எங்கள் உள்ளூர்காரர்கள் என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.</u>

<u>மறு விசாரணை - இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.30 21:02:41 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.